பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 121

30.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற மின்வாரிய வணிக ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.அறிவழகன், மதுரை மாவட்டம், மேலூர், கருத்துபுளியம்பட்டியில் வசித்து வருகிறார். புகார்தாரருக்கு சொந்தமான வாடகை கொட்டகையில் ஏற்கனவே பயன்படுத்திய 22 கிலோவாட் மின்சாரத்திலிருந்து 3 கிலோவாட்டாக குறைக்க மதுரை மாவட்டம், மேலூர் நகரத்தில் உள்ள தமிழ்நாடு மின் பகிர்மான கழக அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.ஆனந்த், வணிக ஆய்வாளர், உதவி பொறியாளர் அலுவலகம், மேலூர் நகரம் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், மதுரை மாவட்டம் அவர்கள் புகார்தாரருக்கு 22 கிலோவாட் மின்சாரத்திலிருந்து 3 கிலோவாட்டாக மின்சாரத்தை குறைக்க தனக்கு ரூ.7,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மதுரை பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 30.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஆனந்த், வணிக ஆய்வாளர் அவர்கள் ரூ.7,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

PRESS RELEASE – 121
30.10.2026

COMMERCIAL INSPECTOR, TNPDCL ARRESTED FOR BRIBE

The complainant, Arivazhagan, a resident of Karuthupuliyampatti, Melur, Madurai District, had applied to the office of the Assistant Engineer, Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL), Melur Town, Madurai District, for reducing of the electricity load from 22 KW to 3 KW for his rented shed. Tr.Anand, Commercial Inspector, office of the Assistant Engineer, Melur Town, TNPDCL, Madurai District, demanded a bribe of Rs.7,000/- from the complainant for reducing electricity load connection. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Madurai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (30.10.2026). During trap proceedings, Tr.Anand, Commercial Inspector, demanded and accepted the bribe amount of Rs.7,000/- from the complainant. The accused was arrested.